2. வினாக்கள்-விடைகள்

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்

Posts in Police Department

*1 Q.—THIRU A. M. RAJA :
THIRU N. S. V. CHITHAN : } Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) the number of posts abolished in the Police Department in the State between January and August 1967; and

(b) the number of persons re-employed in the Department during the period?

THE HON. THIRU C. N. ANNADURAI : (a) 277.

(b) 8.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காவல் துறையிலே இதுமாதிரி நீக்கல் செய்வதுதான் தமிழகத்திலே சட்டம் ஒழுங்கு சீர்குலைவதற்கு காரணமாக இருக்கிறது என்று அரசு உணருகிறதா ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : சட்டம் ஒழுங்கு பாதுகாக்கப் படவேண்டுமென்ற குறிக்கோளை மனதிலே வைத்துக் கொண்டு தேவையற்ற சில பதவிகள் நீக்கப்பட்டிருக்கின்றன.

DR. H. V. HANDE : Is it a fact that recruitment of constables has been suspended since some time back as ascertained from the Vellore Police Training College and also the Coimbatore Training College? According to the authoritative reports coming from these Colleges, it appears that there is a complete suspension of recruitment to the Police constabulary. If these reports are true and there is a suspension of recruitment to the constabulary, may I know the reasons therefor?

THE HON. THIRU C. N. ANNADURAI : Recruitment to these Police Training Schools and Colleges is not similar to the recruitment to the other colleges or high schools, where a number of pupils are always recruited periodically. In the case of the Police Training institutions, recruitment is qualified by the number of people actually required and the number of people already available. Whenever we find need for a particular number of people, we get them recruited from those institutions.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார். கான்ஸ்டேபிளாக வேலையிலே அமர்ந்தவர்களை அவர்களுடைய தகுதி, திறமை, அனுபவம் அத்தனையையும், கணக்கில் எடுத்துக்கொண்டு சப்-இன்ஸ்பெக்டராக நியமிக்கப்பட்டு, அவர்களிலே எத்தனை பேர்கள் எதற்காக நீக்கப்பட்டு, நேரடியாக டிரெயினிங் எடுத்தவர்கள் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள் ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : தனிக் கேள்வி போட்டு இதற்கான விவரங்கள் தெரிந்துகொள்ளலாம்.

THIRU K. VINAYAKAM : Sir, arising out of the answer given by the Hon. Chief Minister, does it mean that the Government do not need any more constables to be recruited? Have we come to a saturation point in regard to this matter? Is it a fact that in North Arcot, about 75 Sub-Inspectors of Police who have been recently promoted under this regime have been reduced to the rank of Head Constables? If it is a fact, may I know the reasons for the same?

THE HON. THIRU C. N. ANNADURAI : Sir, the question contains two parts. One is whether we are not in need of any more policemen. That depends upon the nature of the activities in the country. Anyhow, since we have not permanently closed these schools and colleges, it means that whenever we find the need for additional police force, we will get them recruited.

As for the second part, that is, whether 75 Sub-Inspectors of Police have been reduced to the rank of Head Constables or not, the hon. Member is advised to put a separate question.

திரு. க. ர. நல்லசிவன் : வேலையிலிருந்து நீக்கப்பட்டிருக்கும் இருநூற்றிசொச்சம் பேர்கள் என்னென்ன பதவிகளிலிருந்து நீக்கப்பட்டார்கள் என்ற விவரம் கூறமுடியுமா ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : வேலையிலிருந்து நீக்கப்பட்டார்கள் என்றால் விரட்டப்பட்டார்கள் என்று பொருள் அல்ல. அவர்கள் எல்லாம் வேறு வேறு இடங்களில் அமர்த்தப் பட்டிருக்கிறார்கள்.

திரு. நா. காசிராமன் : வேலையிலிருந்து குறைக்கப்பட்டதன் காரணமாக போலீஸ் படை கணக்கே குறைந்திருக்கிறது. அவர்களைச் சேர்த்துக்கொண்டால், இப்பொழுது இருக்கும் மர்மத் தீக்காரர்களைக் கண்டுபிடிப்பதற்கு உதவியாக இருக்கும். ஆகவே, அவர்களை எடுத்துக்கொள்வார்களா ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : இப்பொழுது நீக்கப்பட்டவர்களைப்பற்றி இப்பொழுது அந்த உறுதி அளிக்க முடியாவிட்டாலும் தேவைப்படுகின்றபோது அதற்குத் தகுந்த வர்களை நியமித்துக்கொள்ளுகின்ற தேவையும் உரிமையும் அரசுக்கு இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

திரு. வி. கே. கோதண்டராமன் : ஒருசில கான்ஸ்டேபிள்கள், சப்-இன்ஸ்பெக்டர்கள் தவறு செய்தார்கள் என்று குற்றம் சாட்டி, நடவடிக்கை எடுக்கப்பட்டு, உயர்நீதி மன்றத்திற்குச் சென்று, அங்கே குற்றம் செய்யவில்லை என்று தீர்ப்பு அளித்த பிறகும், கம்பல்சரி ரிடைர்மென்ட் என்ற பெயரிலே நீக்கப்பட்டிருக் கிறார்கள். அது நீதியை எதிர்ப்பதுபோல் ஆகாதா ? குற்றம் செய்யவில்லை என்று தீர்ப்பு கூறியதற்கு பிறகு கம்பல்சரி ரிடைர் மென்ட் என்று அவர்களை நீக்கியது சரிதானா ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : கனம் உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட சம்பவம் குறித்து தகவல் சொன்னால், அதற்குரிய விவரங்கள் திரட்டித் தரப்படும்.

DR. H. V. HANDE : While replying to my previous question the Hon. Chief Minister did not tell us whether recruitment to these colleges has been stopped and whether there is any change in the policy of recruitment and whether the Government propose to reduce the constabulary force. Will the Hon. Chief Minister take us into confidence and tell us the real position in regard to this matter?

THE HON. THIRU C. N. ANNADURAI : I may tell the hon. Member that there is no change in policy. Recruitment is qualified by the need for men in the police forces.

THIRU K. VINAYAKAM : Reverting to the answer to the main question, may I know from the Hon. Chief Minister on what basis certain posts which are reported to have been abolished now, were originally created? Do this Government feel that those posts are not necessary now? What were the works assigned to them previously, what were the functions which they were discharging previously? Is it a fact that the Government consider that it is not necessary to keep them in those posts now? Will the Hon. Chief Minister state the reasons categorically?

THE HON. THIRU C. N. ANNADURAI : It is quite obvious by the abolition of these posts that this Government feel that they are not necessary.

திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : நீக்கப்பட்டவர்களில் எத்தனை பேர்கள் அரிசனங்கள் என்று கூற முடியுமா ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : நீக்கப்பட்டவர்கள் என்று இதிலே தலைப்பு இருக்கிறதே தவிர, வேலையிலிருந்து அகற்றப்பட்டார்கள் என்று பொருள் அல்ல. இதிலே ஆதித்திராவிடர்கள் எத்தனை பேர்கள் என்ற தகவல் என்னிடம் இல்லை.

Copies of Central Budget

*2 *Q.*—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Chief Minister be pleased to state whether copies of the Central Budget were burnt by political parties at various places in Madras City, in April 1968?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : 3—4—1968-ம் நாளன்று இந்திய பொதுவுடைமைக் கட்சியின் (வலதுசாரி) தமிழ்நாட்டுப் பிரிவைச் சேர்ந்த உறுப்பினர்கள் சென்னை மாநகரின் பல்வேறு முக்கியமான பகுதிகளில் மத்திய அரசின் வரவு செலவுத் திட்டத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட சில பகுதிகளைத் தீ இட்டுக் கொளுத்தினர்.